**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 178 தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணைக்கக் கூற்றுக்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 14 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும், இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் தயாரித்தல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, இதன் (அ) முதல் (ஈ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சால் பின்வரும் பதிவேடுகள் முறைப்படியாக நாளதுவரையாக்கப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| நிவையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிவையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

## (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

### (i) மொத்த ஏற்பாடும் செலவும்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,785,791,900 ஆனதுடன் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இதில் ரூபா 1,090,965,626 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய சேமிப்புகள் ரூபா 694,826,274 ஆகக் காணப்பட்டதுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டில் 39 சதவீதமாகும். விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேமிப்பு | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டெழுபவை | 563,690,000 | 567,606,000 | 31,144,893 | 5 |
| மூலதனம் | 1,200,100,000 | 1,218,185,900 | 663,681,381 | 54 |
| மொத்தம் | 1,763,790,000 | 1,785,791,900 | 694,826,274 | |

### (ii) பாதீட்டு முரண்

09 செலவின விடயங்களுக்கான மேலதிக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 10,977,113 தொகை அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 44 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

17801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானது | இழிவு எல்லை | உள்ளபடியானது | உச்ச எல்லை | உள்ளபடியானது |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 1,500,000 | 1,456,400 | 300,000 | 1,103,810 | 3,800,000 | 3,735,803 |

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கின் ஒரு வருடத்திற்குக் குறைவான வைப்பு மீதி ரூபா 925,404 ஆகக் காணப்பட்டது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களி பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

சுகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 21 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, தெங்கு ஆராய்ச்சி நிறுவகம், சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி மற்றும் குருநாகல் பெருந்தோட்டக் கம்பனி என்பனவாக மூன்று நியதிச்சட்ட சபைகள் மற்றும் இரண்டு அரசாங்க கம்பனிகளிலும் அமைச்சிலும் அமைச்சு அலுவலகத்திலும் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்டவாறு கடமைகளையும் பொறுப்புகளையும் மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் ஸ்தாபிக்க வேண்டிய போதிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று 2013 யூன் 30 வரையிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளன.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| 01 | **நிதிப் பிரமாணம்** | | | |
| | i. | நி.பி.104 | 285,357 | நட்டங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பொறுப்பானவர்கள் நிர்ணயிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்கான 04 வாகன விபத்துக்கள் குறித்து விசாரணைகள் நடாத்தப்பட்டு பொறுப்பானவர்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | ii | நி.பி. 104(2) | 258,456 | ரூபா 50,000 இற்கும் கூடுதலான நட்டங்கள் இழப்புகள் தொடர்பான அறிக்கையின் ஒரு பிரதி திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | | | வேண்டிய போதிலும் வாகன விபத்து தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| iii. | நி.பி.1645(அ) | 606,565 | பழுதுபார்த்தல் செலவினம் சம்பவக் குறிப்பேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| iv. | நி.பி.1646 | | பயணம் தொடர்பாக மாதாந்தப் பொழிப்பின் முதற் பிரதிகளுடன் உரிய மாதங்களின் ஓட்ட அட்டவணைகள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| v. | நி.பி. 1647 (ஆ) | | வாகனங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பான உபகரணங்கள் மீது மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 02. | பொது நிர்வாக சுற்றறிக்கை<br>-------------------------<br>1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்கம் | 6 மாதங்களுக்கு ஒரு முறை வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் வாகனம் தொடர்பாக அத்தகைய ஆய்வு அமைச்சு ஆரம்பிக்கப்பட்டது முதல் 2013 யூன் 30 இல் உள்ளவாறும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**1.6 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------

i. அமைச்சு அலுவலகம் இயங்கிய மஹாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் மேம்படுத்துதல் அல்லது வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமாயின் அது எப்போதும் குத்தகைக்கு வழங்கியவரிடமிருந்து எழுத்து மூல அங்கீகாரத்துடன் மிகவும் கவனமாக

மேற்கொள்ளப்பட வேண்டும் என குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் ரூபா 9,030,595 தொகையான பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்படுகையில் மஹாவலி அதிகாரசபையின் எவ்வித எழுத்து மூல அங்கீகாரம் மற்றும் கவனமின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ii. நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சிய பதிவேடுகள் பேணப்படல்.

- அமைச்சின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மீதிகள் பிரதான பொருட் பதிவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட மீதியுடன் இணங்கியிராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.
- பொருட்கள் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் வழங்கப்படுகையில் குறியீடு இடப்பட்டிருக்கவில்லை.
- பொருட்கள் பெறப்படுகையிலும் வழங்கப்படுகையிலும் பிரதான பொருட் பதிவுப் புத்தகத்தில் தொடர் குறிப்பு இடப்பட்டிருக்கவில்லை.
- பிரதான பொருட் பதிவுப் புத்தகத்திலும் ஒவ்வொரு பிரிவின் மூலம் பேணப்படும் பொருட் பதிவுப் புத்தகங்களிலும் உள்ள பொருட்களின் விபரம் குறிப்பாக இனங்காணப்படக் கூடிய வகையில் விபரமாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

iii. தென்னந்தோட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டிருந்த வலையமைப்புச் செய்யப்பட்ட தகவல் முறைமை

- இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனத்தின் (ICTA) Re – Gov/MISC 2012 ஆம் இலக்க 2012 ஏப்ரல் 30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இந்த வலையமைப்புச் செய்யப்பட்ட தகவல்கள் முறைமை பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் இலங்கை கணனி அவசர குழுவின் (Sri Lanka Computer Emergency Team) ஊடாக இம் முறைமையில் பயன்படுத்தப்பட்டுள்ள தகவல்களைப் பாதுகாத்துப் பயன்படுத்தல் தொடர்பான கணக்காய்வை மேற்கொள்ள வேண்டும் எனக்

குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2013 யூன் 30 வரை அத்தகைய கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iv. வெலிகம இலை கருகல் மற்றும் இலை வாடல் நோய்

- அமைச்சின் மூலம் மாத்தறை மாவட்டச் செயலாளர் அவர்களுக்கு ரூபா 170 மில்லியன் தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் தொடர்பான விபரமான ஓர் அறிக்கை உரிய உறுதிச்சீட்டின் பிரதியுடன் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 06 | 05 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 09 | 03 | 06 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 768 | 230 | 538 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 21 | 18 | 03 |
| | மொத்தம் | 804 | 256 | 548 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரை 548 வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது.